சுருக்கம்

வேளாண்மை – நில எடுப்பு சின்ன சேலம் வட்டம் வடக்கனந்தல் கிராமம் – அரசு விதைப்பண்ணைக்கு நிலம் கையகப்படுத்தப்பட்டது – திரு.V.T.E. திருநாராயணன், த/பெ. இளையாப்பிள்ளை, வடக்கனந்தல் கிராமம், சின்னசேலம் வட்டம் – கள்ளக்குறிச்சி சார்பு நீதிமன்றத்தில் LAOP.No.15/1996 வழக்கு தொடர்ந்தது – கூடுதல் இழப்பீட்டுத் தொகை வழங்க நீதிமன்றத்தால் ஆணையிடப்பட்டது – இழப்பீட்டுத் தொகை வழங்குதல் – அரசாணை வெளியிடப்பட்டது – கணக்குத் தலைப்பு மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை (வேஉ3) த்துறை

திருவள்ளுவர் ஆண்டு 2049, பங்குனி மாதம் 14ஆம் நாள்

அரசாணை(டி)எண். 55 நாள் 28.03.2018

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (டி) எண்.272, வேளாண்மை (வேஉ3) துறை, நாள் 03.11.2017.
2. வேளாண்மை இயக்குநரின் கடித எண் டான்சிடா 1/143929/2016, நாள் 26.12.2017 மற்றும் 07.02.2018.

*******

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, விழுப்புரம் மாவட்டம், சின்னசேலம் வட்டம், வடக்கனந்தல் கிராமத்தில் புல எண். 475/3, 490/15, 491/5, 493/5, 490/11, 491/3 மற்றும் 491/2 ஆகிய புல எண்களில் 33.39 ஏக்கர் நிலம் அரசு விதைப்பண்ணைக்கு கையகம் செய்யப்பட்டதில் மேற்படி புல எண்களில் அமைந்துள்ள அருள்மிகு உமாமகேஸ்வரர் ஆலயம் மற்றும் வகையறா கோவில்களுக்கு உரிமையான 6 ஏக்கர் 11 செண்ட் நிலத்திற்கு கூடுதல் இழப்பீடு கேட்டு கள்ளக்குறிச்சி சார்பு நீதி மன்றத்தில் மேற்படி கோவில்களுக்கு பரம்பரை தர்மகர்த்தா என்ற முறையில் திரு.V.T.E. திருநாராயணன், த/பெ.இளையாப்பிள்ளை தொடர்ந்த வழக்கு LAOP No.15/1996-ல் 10.11.2014 அன்று வழங்கப்பட்ட உத்தரவின்படி, மனுதாரருக்கு கூடுதல் இழப்பீட்டுத் தொகையாக 21.02.2017 அன்றைய நிலவரப்படி ரூ.3,28,446/– ஐ வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட தனது கடிதங்களில், அரசாணை(நிலை) எண்.272, வேளாண்மை (வேஉ3) துறை, நாள் 03.11.2017ன்படி மனுதாரருக்கு கூடுதல் இழப்பீட்டு தொகை ரூ.3,28,446/–ஐ (மூன்று இலட்சத்து இருபத்து எட்டாயிரத்து நானூற்று நாற்பத்து ஆறு மட்டும்) வழங்கிடுமாறு வேளாண்மை இயக்குநர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை உரிய ஆவணங்களுடன் அரசு நன்கு ஆராய்ந்து, விழுப்புரம் மாவட்டம், சின்னசேலம் வட்டம், வடக்கனந்தல் கிராமத்தில் புல எண். 475/3, 490/15, 491/5, 493/5, 490/11, 491/3 மற்றும் 491/2 ஆகிய புல எண்களில் 33.39 ஏக்கர் நிலம் அரசு விதைப்பண்ணைக்கு கையகம் செய்யப்பட்டதில், மேற்படி புல

(த.பி.பா.)

எண்களில் அமைந்துள்ள அருள்மிகு உமாமகேஸ்வரர் ஆலயம் மற்றும் வகையறா கோவில்களுக்கு உரிமையான 6 ஏக்கர் 11 செண்ட் நிலத்திற்கு கூடுதல் இழப்பீடு கேட்டு கள்ளக்குறிச்சி சார்பு நீதி மன்றத்தில் மேற்படி கோவில்களுக்கு பரம்பரை தர்மகர்த்தா என்ற முறையில் திரு.V.T.E. திருநாராயணன், த/பெ.இளையாப்பிள்ளை தொடர்ந்த வழக்கு LAOP No.15/1996-ல் 10.11.2014 அன்று வழங்கப்பட்ட உத்தரவின்படி, மனுதாரருக்கு கூடுதல் இழப்பீட்டுத் தொகையாக 21.02.2017 அன்றைய நிலவரப்படி ரூ.3,28,446/–ஐ (மூன்று இலட்சத்து இருபத்து எட்டாயிரத்து நானூற்று நாற்பத்து ஆறு மட்டும்) வழங்குவதற்கு அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

4. இச்செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2401 – 00– பயிர் வளர்ப்பு– 103– விதைகள் – மாநிலச் செலவினங்கள் – AA – அரசு விதைப்பண்ணைகள் ஏற்படுத்தல் – 51 –இழப்பீடு – 02 – ஏனைய இழப்பீடுகள்"
(த.தொகு. 2401 00 103 AA 5124)

5. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்டுள்ள தொகை, 2017–18ம் ஆண்டு இறுதி திருத்த மதிப்பீடு/இறுதி துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை வேளாண்மை இயக்குநர் அவர்கள் பெற்று வழங்கிட அனுமதியளிக்கப்படுகிறார்.

6. இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.எண்.13959/வேளாண்மை/2018, நாள்26.03.2018இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–5.
மாவட்ட ஆட்சியர், விழுப்புரம் மாவட்டம்.
மாவட்ட கருவூல அலுவலர், விழுப்புரம் மாவட்டம்.
நகல்:–
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்
அவர்களின் தனிச் செயலர், சென்னை–9.
நிதி (வேளாண்மை)த்துறை, சென்னை–9.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, சென்னை–9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்